


# கே.எம்.சி.எச் - ஆஸ்பத்திரியில் பக்கவாதத்துக்கு நவீன சிகிச்சை

கோவை: கோவை கே.எம்.சி.எச். மருத்துவ மனை 700 படுக்கைகளுடன் அதி நவீன சிகிச்சைகளுடன், முன்னணியில் இருக் கிறது. சமீபத்தில் ஸ்ட்ரோக் என்னும் மூளை ரத்தக் குழாய் அடைப்புக்காக சிகிச்சை பெற வந்த ஒரு நோயாளியை, சோனா திரோம்போலிசிஸ் என்னும் அதி நவீன சிகிச்சை முறையால் குணமாக்கியுள்ளது.

மூளையில் ஏதாவது ஒரு பகுதியில் ரத்தக் குழாய் அடைப்பு நேர்வது தான் ஸ்ட்ரோக் என்பதாகும். தற்போது, மருந்துகளால் மாரடைப்பு ரத்தக் கட்டி அடைப்புகளை கரைத்து விடுவது போல, உடனடியாக மூளையடைப்பு ரத்தக்கட்டிகளையும் கரைத்து விடலாம்.

டீஸ்யூ பிளாஸ்மினோஜென் ஆக்டிவேட்டர் என்னும் மருந்து மூலம் ரத்தக்கட்டி கரைக்கப்படுகின்றது. இதை சோனாத்ரோம்போலிசிஸ் சிகிச்சை என்று அழைப்பார்கள்.

சமீபத்தில் அன்னூரைச் சேர்ந்த பொன்னுசாமி, ஸ்ட்ரோக்கால் பாதிக்கப்பட்டதும் ஒன்றறை மணி நேரத்திற்குள்ளாக கே.எம்.சி.எச். மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தார். இடது பக்க கை, கால் இயக்க முடியவில்லை. சி.டி. ஸ்கேன் எடுக்கப்பட்டது. மூளையின் வலது பகுதியில், பிரதான இரத்தக் குழாயில் அடைப்பு இருப்பதும், டிரான்ஸ்கிரேனியல் டாப்ளர் பரிசோதனையில், அல்ட்ரா சவுண்டு அலைகள் மூலமும் ரத்த ஓட்டதடையும் கண்டறியப்பட்டது.

கோவை கே.எம்.சி.எச். மருத்துவமனையின் நரம்பியல் சிகிச்சை துறையின் டாக்டர்.கே.விஜயன் தலைமையில் சோனாத்ரோம்போலிசிஸ் சிகிச்சை வெற்றிகரமாக நடந்தது. கோவையில் முதன் முறையாக இத்தகைய சிகிச்சை செய்து சாதனை புரிந்துள்ளது கே.எம்.சி.எச். மருத்துவமனை என்பது குறிப்பிடத்தக்கது.